பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 15 | சனிக்கிழமை | 30.11.2024 | அதிர்வு 120

முகநூல் பதிவுக்காக

## யாழ். இளைஞர் ரி.ஐ.டியால் கைது!

யாழ்ப்பாணம், இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை அவரது வீட்டில் வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர். 05



### தமிழர்கள் அதிகளவு வாழும் வடக்கு - கிழக்கில்

# இனி எந்த நினைவேந்தலுக்கும் அநுர அரசு அனுமதிக்கக்கூடாது!

## இப்படிக் கொக்கரிக்கின்றார் விமல்

"வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வு என்ற பெயரில் மரணித்த விடுதலைப்புலிகளைத் தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவுகூர்கின்றார்கள். எனவே, அங்கு இனிமேல் எந்தவொரு நினைவேந்தல் நிகழ்வுக்கும் அநுர அரசு அனுமதி வழங்கக்கூடாது. எமது இந்தக் கோரிக்கையை அநுர அரசு புறக்கணித்தால் அதற்கு எதிராகத் தெற்கில் நாம் மக்களை அணிதிரட்டிப் போராடுவோம்."

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். 05

## 69 ஆயிரம் பேர் யாழில் பாதிப்பு



சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 05

## 'வெள்ளை வான்' சர்ச்சை வழக்கு: ராஜித உள்ளிட்ட மூவர் விடுவிப்பு

"வெள்ளை வான்" குறித்து சர்ச்சைக்குரிய தகவல்களை வெளியிட்டமை தொடர்பான வழக்கிலிருந்து முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட மூவரை விடுவிப்பதாக கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

(விரிவான செய்தி 14ஆம் பக்கத்தில்.)






பொதுத் தேர்தல் முடிந்து விட்டது. இலங்கையில் பெரும்பாலும் பல அரசியல் கட்சிகளின் உள் குழப்பங்கள் தற்காலிகமாக நிறுத்தத்துக்கு வந்திருக்கின்றன.

ஆனால் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் நிலைமை அப்படி இல்லை. இனித்தான் விவகாரங்கள் மேலும் சூடு பிடிக்க இருக்கின்றன.

தேர்தல் காலத்தில் வேட்பாளர் நியமனம் முடிந்த கையோடு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா எழுதிய ராஜினாமாக் கடிதத்தின் மீது இப்போது தாம் உரிய நடவடிக்கை எடுக்கின்றார் என்று கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் சத்தியலிங்கம், மாவை சேனாதிராஜாவுக்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கிறார் எனத் தெரிகின்றது.

இக்கடிதம் சத்தியலிங்கம் தரப்பிலிருந்து அனுப்பப்பட்ட பின்னர், நேற்று பகல் பல தடவைகள் சத்தியலிங்கத்தைத் தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்கு மாவை சேனாதிராஜா முயன்றார் எனத் தெரிகிறது. ஆயினும் நேற்று 05



# ஆபத்தை எதிர்நோக்கிய மருதங்கேணிப் பாலத்தை நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர் சந்திரசேகர்

யாழ். மருதங்கேணிப் பாலத்தின் அருகில் வீதி தாழ் இறங்கியமையால் பாலம் ஆபத்தான நிலையில் காணப்பட்டமையை அடுத்து உடனடியாக அதன் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புதுக்காட்டுச் சந்தியில் இருந்து தாளையடி செல்லும் வீதியில் மருதங்கேணி பாலம் அமைந்துள்ள வீதியின் பகுதி, அதிக நீரோட்டம் காரணமாக நேற்றுக் காலை தாழிறங்கிக் காணப்பட்டது.

உடனடியாக அந்தப் பகுதியில் மண் மூடைகள் போடப்பட்டு சீர்செய்யப்பட்டமையால் மேலும் வீதி சேதமடையாமல் தடுக்கப்பட்டது. அதேவேளை, இந்தப் பாலம் ஊடாக கனரக வாகனங்களின் போக்குவரத்துக்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று யாழ் . மாவட்ட செயலர் ம.பிரதீபன் நேற்று அறிவித்துள்ளார்.

நேற்றுக் காலை வீதி தாழிறங்கிக் காணப்பட்டமை தொடர்பில் தகவல் அறிந்த கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், மருதங்கேணிப் பகுதிக்குச் சென்று திருத்த வேலைகளை நேரில் பார்வையிட்டதுடன், அதிகாரிகளிடம் அது தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

(மற்றொரு செய்தி 12ஆம் பக்கத்தில்...)









# இலங்கையில் தமிழர்களின் இருப்புக்கு சர்வதேச தலையீடு மிகவும் அவசியம்!

## மாவீரர் நினைவேந்தல் நிகழ்வில் புலம்பெயர் தமிழர்கள் கோரிக்கை

மாவீரர் தினத்தையொட்டி பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இலண்டனில் விசேட நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் ஆயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் பங்கேற்று உயிர்நீத்த தமது உறவுகளை உணர்வுபூர்வமாக நினைவுகூர்ந்ததுடன், அவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலியும் செலுத்தினர்.

புலம்பெயர் தமிழர்கள் ஒவ்வொரு ஆண்டு தாம் வாழும் நாடுகளில் மாவீரர் தின நிகழ்வை அனுஷ்டித்து வருகின்றனர். இம்முறையும் பிரித்தானியா, கனடா, பிரான்ஸ் உட்பட பல நாடுகளில் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்தினர்.

இதில் இலண்டனில் நடைபெற்ற நிகழ்வில் திரண்ட தமிழர்கள், இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போர் தொடர்பில் நீதியான விசாரணை அவசியம் என்பதை வலியுறுத்தியதுடன், தமிழ் மக்களுக்கான சர்வதேச நீதி நிலைநாட்டப்படுவதன் தேவையையும் வலியுறுத்தினர்.

இங்கையில் தமிழ் மக்களின் இருப்பைத் தீர்மானிக்க சர்வதேச தலையீடு மிகவும் அவசியம் என்றும், சம காலத்தில் ஈழத் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து மனித உரிமைகளை நேசிக்கும் மேற்கத்திய நாடுகள் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் புலம்பெயர் தமிழ் மக்கள் வலியுறுத்தினர்.





# பரந்தன் பொதுநோக்கு மண்டபத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கவைப்பு!

## நேரில் பார்வையிட்ட சிறீதரன் எம்.பி.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பரந்தன் பொதுநோக்கு மண்டபத்தில் இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேரில் சென்று பார்வையிட்டார்.











# பருத்தித்துறையில் தாழிறங்கிய வீதி தற்காலிகமாக சீரமைக்கப்பட்டது



சீரற்ற காலநிலை காரணமாக பருத்தித்துறை கடற்கரை வீதியில் இரு இடங்களில் தாழிறங்கிய வீதி தற்காலிகமாக சீரமைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை துறைமுக பகுதி மற்றும் சக்கோட்டை சவேரியார் தேவாலயத்திற்கு முன்பாக என இரு இடங்களில் குறித்த வீதியோரமாக கடலரிப்பு ஏற்பட்டதன் காரணமாக வீதி தாழிறங்கியிருந்தது.

இதையடுத்து குறித்த பள்ளங்களில் கருங்கற்கள் கொட்டப்பட்டு தற்காலிகமாக சீர்செய்யப்பட்டு பாதுகாப்பு தடுப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

# தேசியப் பட்டியல் விவகாரம்: திணறுகின்றது சஜித் அணி



தேசியப் பட்டியல் விவகாரத்தால் ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் ஏற்பட்டிருந்த குழப்ப நிலை உக்கிரமடைந்துள்ளது என்று தெரியவருகின்றது.

இதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தயாசிறி ஜயசேகர அணி மற்றும் டலஸ் அழகப்பெரும தரப்பு என்பன கூட்டணி உறவை முறித்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஐந்து தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. அதில் ஒன்று கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன ஆகியோருக்கும் தேசியப் பட்டியல் உறுதியாகியுள்ளது.

எஞ்சிய இரண்டு ஆசனங்களை எவருக்கு வழங்குவது என்பதிலேயே தற்போது குழப்பம் நீடிக்கின்றது. சுஜீவ சேனசிங்க, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், நிஷாம் காரியப்பர், ஹிருணிகா, டலஸ் அழகப்பெரும, ஜி.எல்.பீரிஸ் ஆகியோரின் பெயர்கள் பரிசீலனையில் இருந்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் இருவருக்கு அதற்கான வாய்ப்பை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகல் முழு நாளும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திலும் வவுனியா அனர்த்த நிலைமை தொடர்பான நடவடிக்கை ஒழுங்குகளிலும் மருத்துவர் சத்தியலிங்கம் மும்முரமாக இருந்தமையால் மாவை சேனாதிராஜாவுடன் அவர் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை எனத் தெரிகிறது.

மாவை சேனாதிராஜாவின் தலைவர் பதவி ராஜினாமாக் கடிதம் தொடர்பில், அந்தக் கடிதத்தை வாபஸ் பெறுமாறு மாவை சேனாதிராஜாவுக்கு தனிப்பட்ட முறையில் சிலர் ஆலோசனை கூறினார்கள் என்று தெரிகிறது. ஆயினும் நேற்று வரை அத்தகைய வாபஸ் கடிதம் எதுவும் கட்சியின் பொதுச் செயலாளருக்குக் கிடைக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்த முடிந்தது.

இப்போது அந்த ராஜினாமாக் கடிதம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொதுச் செயலாளர் அறிவித்திருப்பதன் அர்த்தம், அவர் (மாவை சேனாதிராஜா) தொடர்ந்து தலைவராக செயல்பட முடியாது என்பதுதான்.

கட்சியின் அடுத்த பொதுச் சபைக் கூட்டம் வரை பதில் தலைவரோடு கட்சி செயல்பட வேண்டி இருக்கும்.

கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரான சி.வி.கே.சிவஞானம் பதில் தலைவர் பதவியை ஆற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே நேரம் கட்சியின் தீர்மானத்துக்கு மாறாக ஜனாதிபதி தேர்தலில் செயற்பட்டமை தொடர்பில் சிறிதரன், மாவை சேனாதிராஜா உட்பட சில முக்கியஸ்தர்களிடம் விளக்கம் கேட்டு கட்சி பொதுச் செயலாளர் அனுப்பிய கடிதத்திற்கு மாவை தரப்படமிருந்தோ சிறிதரன் தரப்பிடமிருந்தோ பதில் ஏதும் வழங்கப்பட்டதாக தெரியவில்லை. ஆயினும் மட்டக்களப்பு தற்போதைய எம்.பி. சிறிநேசன் விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார் என அறிய வந்தது.

அதே சமயம் கடந்த பொதுத் தேர்தலில் கட்சிக்கு எதிராக வேறு தரப்புகளில் இணைந்து போட்டியிட்டமை, பிற தரப்புகளுக்கு ஆதரவாக பகிரங்கமாக பிரச்சாரம் செய்தமை போன்றவற்றோடு தொடர்பு பட்ட பெரும் எண்ணிக்கையானோருக்கு விளக்கம் கோரும் கடிதமும் அதுவரை அவர்களைக் கட்சியிலிருந்து இடை நிறுத்தும் கடிதமும் அடுத்து வரும் நாள்களில் அனுப்பப்பட இருப்பதாகத் தெரிகிறது.

கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவராக இருந்த ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா மற்றும் செயலாளர் எனக் கூறப்பட்ட மிதிலைச் செல்வி ஆகியோர் கட்சியிலிருந்து தாங்கள் விலகி விட்டனர் என அறிவித்திருப்பதால், அந்த அறிவிப்பை ஏற்று, அவர்களைக் கட்சியிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், கொழும்புக் கிளையைப் புதிதாக கூட்டி இயக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயங்கள் நடைமுறைக்கு வரும்போது தமிழரசு கட்சிக்குள் மீண்டும் கலகலப்புக்கள், குழப்பங்கள் தாராளமாக இடம்பெறும் என எதிர்பார்க்கலாம்.

## 69 ஆயிரம் பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

20 ஆயிரத்து 732 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயி ரத்து 384 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.

அதேவேளை, அனர்த்தங்களால் 4 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் 178 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மேலும் 79 பாதுகாப்பு நிலையங்களில் 2 ஆயிரத்து 136 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 342 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

## யாழ்.இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவரது முகநூல் பதிவொன்று தொடர்பான விசாரணைக்காகவே கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவரை யாழ்ப்பாணத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளைப் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகள் முடிவுற்றதும் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இனி எந்த நினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில்தான் தமிழர்கள் செறிந்து வாழ்கின்றார்கள். அங்கு அவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் – சட்டங்களுக்கு மதிப்பளிக்காமல் தாம் நினைத்த மாதிரி வாழ்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வு என்ற பெயரில் மரணித்த விடுதலைப்புலிகளை தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவுகூர்கின்றார்கள். கடந்த 27 ஆம் திகதி கடும் மழை, வெள்ள அனர்த்தங்களுக்கு மத்தியிலும் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் மாவீரர் நாள் நிகழ்வில் பங்கேற்றுள்ளார்கள். இது தெற்கில் வாழும் சிங்கள மக்களைக் கொதிப்படையச் செய்யும் நடவடிக்கையாகும்.

தமிழ் மக்களின் பார்வையில் மாவீரர்கள் யார்? அவர்கள், இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி மரணித்த விடுதலைப்புலிகளாவர். நாட்டை அழித்த – சிங்கள மக்களைக் கொடுமைப்படுத்திய அந்தப் பயங்கரவாதிகளை எப்படி நினைவேந்தலாம்? நாட்டின் சட்டத்தின் பிரகாரம் பயங்கரவாதிகளை நினைவேந்த அனுமதி இல்லை.

எனவே, மாவீரர் நாள் நிகழ்வுக்கு அநுர அரசு ஏன் அனுமதி வழங்கியது? தமிழ் டயஸ்போராக்களுக்குப் பயந்து அநுர அரசு செயற்படுகின்றதா?

வடக்கு, கிழக்கில் இனிமேல் எந்தவொரு நினைவேந்தல் நிகழ்வுக்கும் அநுர அரசு அனுமதி வழங்கக்கூடாது. எமது இந்தக் கோரிக்கையை அநுர அரசு புறக்கணித்தால் அதற்கு எதிராகத் தெற்கில் நாம் மக்களை அணிதிரட்டிப் போராடுவோம்.

வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு – மாவீரர் நாள் நிகழ்வுக்கு அனுமதி வழங்குவதுதான் நல்லிணக்கம் அல்ல என்பதை அநுர அரசு புரிந்து கொள்ள வேண்டும்." – என்றார்.



# மருதங்கேணி பிரதேசத்தில் 391 குடும்பங்கள் பாதிப்பு!

மருதங்கேணி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 391 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக மருதங்கேணி பிரதேச செயலாளர் கே.பிரபாகர மூர்த்தி தெரிவித்தார்.

364 குடும்பங்களைச் சேர்ந்த 1069 பேர் உறவிர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். நான்கு நலன்புரி முகாம்களில் ஏனையவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

குடத்தனை – பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 10 பேரும், அம்பன் பிரதேசத்தில் சிவனொளி முன்பள்ளியில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும், நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேரும், மருதங்கேணி கிராம சேவகர் அலுவலகத்தில் ஒரு குடும்பங்களைச் சேர்ந்த 4 பேருமாக 27 குடும்பங்களைச் சேர்ந்த 91 பேர் நான்கு நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.











# வெள்ள நிலைவரம் தொடர்பில் முல்லைத்தீவில் அவசர கூட்டம்

முல்லைத்தீவில் கடந்த சில நாள்களாக ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை தொடர்பாக ஆராய்வதற்கான விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன் போது மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புக்கள் தொடர்பாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது,

இந்த கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான றிசாட் பதியூதீன், காதர் மஸ்தான், ம.ஜெகதீஸ்வரன், து.ரவிகரன், செ.திலகநாதன், ப.சத்தியலிங்கம், மற்றும் மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன், மேலதிக மாவட்ட செயலாளர் எஸ்.குணபாலன், பிரதேச செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், ஏனைய திணைக்கள அதிகாரிகள், பொலிசார், இராணுவத் தரப்பு உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# காற்றுமாசுபாடு

நிகழ்நேர காற்றுத் தரச் சுட்டெண் அளவின் படி, இலங்கையின் வளிமண்டலத்தில் சுட்டிக்காட்டப்பட்ட காற்று மாசு அளவு இன்னும் அபாய கட்டத்தில் உள்ளது என்பதும், நாடு ஆரோக்கியமற்ற காற்றின் தர நிலைமைகளை அனுபவிக்கும் சூழலில் சிக்குண்டுள்ளது என்பதும் தெளிவாகியுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, புத்தளம், தம்புள்ளை, மாத்தளை, நீர்கொழும்பு, கண்டி, கொழும்பு, இரத்தினபுரி, அம்பலாங்கொடை மற்றும்காலி ஆகியஇடங்களில் ஆரோக்கியமற்ற காற்று மாசு நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த பகுதிகள் ஆரோக்கியமற்ற காற்றின் தரத்தை எதிர் கொள்ளும் என்று அறிக்கைகள் கூறுகின்றன. இதனால் இப்பிரதேசங்களில் வாழும் - சுவாச சிக்கல்கள் உள்ளவர்கள் - முகமூடி அணிவது மற்றும் வீடுகளுக்கு உள்ளே இருப்பது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு, மஹியங்கனை, மொனராகலை, ஹங்லந்தாவ, ஹிங்கம ஆகிய இடங்களிலும் ஆரோக்கியமற்ற மட்டத்தில் சில மாசுபாடுகள் இருக்கலாம் என்றும், வளிமண்டல மாசுபாட்டிற்கு அசாதாரணமாக உணர்திறன் கொண்ட ஒரு சிலருக்கு உடல்நலம் கவலை அளிக்கும் விதத்தில் மாறலாம் என்றும் கூறப்படுகின்றது.

நுவரெலியா மற்றும் தியத்தலாவை போன்றவை ஏற்றுக்கொள்ளக்கூடிய காற்றின் தரத்தில், மிதமான காற்று மாசுபாட்டைக் கொண்டவையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

காற்றுத் தரக் குறியீடுகள் ஓரிடத்தில் காற்று மாசுபாட்டின் அளவை வழங்குகின்றன. அவை சுகாதார பாதிப்புகளால் வகைப்படுத்தப்படுகின்றன.

நாட்டின் தலைநகர் கொழும்பில் சுற்றுச்சூழல் மற்றும் காற்றின் மாசுபாட்டிற்கு பிரதான காரணம் தலைநகரத்தில் ஓடித்திரியும் போக்குவரத்து வாகனங்கள் உமிழும் கரிய அமில வாயுதான் எனக் கூறப்படுகின்றது.

நாட்டில் - குறிப்பாக தலைநகரில் - போக்குவரத்தில் ஈடுபடும் பெரும்பாலான வாகனங்கள் 10 வருடத்திற்கு முந்திய பழமை வாய்ந்தவை. சில வாகனங்கள் அரை நூற்றாண்டு கழித்தும் ஓடிக்கொண்டிருக்கின்றன.

பல மேற்கு நாடுகளில் இவ்வாறு பழைய வாகனங்கள் மூலம் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் கெடுதி கருதிக் கணக்கெடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் பழைய வாகனங்களை பாவனையில் இருந்து அகற்றும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வீடுகள், தொழிற்சாலைகளில் எரிக்கப்படும் கழிவுகள் அடுத்த கட்டத்தில் காற்று மாசுபாட்டுக்கு காரணமாகின்றன.

காற்று மாசுபாடு மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் சுவாச ரீதியான தொற்று நோய்கள், நெருக்கடிகள், இதய நோய், தொண்டை அழற்சி, நெஞ்சு நோ, மூக்கடைப்பு போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

நாட்டில் கொவிட் தொற்று ஏற்பட்ட காலத்தில் மக்கள் நடமாட்டம் குறைந்து, வாகனங்கள் ஓடித்திரிவதும் கணிசமாக குறைந்த சூழலில், நாட்டில் காற்று மாசுபாடும் குறைவடைந்து நாட்டின் காற்றின் தரம் உச்சமாக அமைந்திருந்தது.

அயல் தேசமான இந்தியாவில் பல இடங்களிலும் சுற்றுச் சூழல் காற்றின் நிலைமை மிக மோசமான அளவில் இருப்பது தெரிந்த விடயமே. அதன் தாக்கம் - பாதிப்பு - இலங்கையிலும் உள்ளது எனினும் இப்போதைய இலங்கை நிலைமைக்கு அது காரணம் அல்ல என்றும் கூறப்படுகின்றது.

வாகனங்கள், தொழிற்சாலைகளை ஒழுங்காகப் பேணுதல், குப்பை - கூளங்களை கண் மூடித்தனமாக எரிப்பதைத் தவிர்த்தல், மரங்களை வளர்த்து சுற்றுச் சூழலைப் பேணுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் நமது சூழலையும் காற்றுத் தரத்தையும் நாமே பேணி பாதுகாப்பது அவசியம்.



# கொடிகாமத்தில் வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்த சிறீ

யாழ். கொடிகாமம் – தவசிகுளம் பகுதியில் வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

அந்த மக்களுக்கான உடனடி உலருணவு உதவிகளையும் அவர் வழங்கி வைத்தார்.







## கோப், கோபா குழுக்களின்

# தலைமைப் பதவியை கோரும் சஜித் அணி!

பத்தாவது நாடாளுமன்றத்தில் சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதி தவிசாளர் பதவிகளுக்கு ஆளுங்கட்சி எம்.பிக்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், முக்கிய குழுக்களின் தலைமைப் பதவி எதிரணிக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோப், கோபா மற்றும் அரச நிதி தொடர்பான குழுக்களின் தலைமைப் பதவியை தமது அணிக்கு வழங்குமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரியுள்ளது.

சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகப் பண்புகளை இந்த அரசு மதிக்கின்றதெனில், நாடாளுமன்றக் குழுக்களின் தலைமைப் பதவி எதிரணிகளுக்கு வழங்கப்படுவதே சிறப்பாக அமையும் என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோருக்கு எதிரணிகள் கூட்டாக மனுவொன்றைக் கையளிக்கத் திட்டமிட்டுள்ளன.



# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகள் குறைக்கப்படவில்லை

## குஷானி ரோஹணதீர தெரிவிப்பு



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகள் முன்னரை போன்றே வழங்கப்படும் எனவும் இதுவரையில் அந்த சிறப்புரிமைகள் எந்தவிதத்திலும் குறைக்கப்படவில்லை என்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கையில்,

"நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக 35 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களால் மீள ஒப்படைக்கப்பட்ட 25 முதல் 30 இல்லங்கள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

முன்னுரிமைக்கு ஏற்ப அந்த இல்லங்கள் எதிர்வரும் காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

மொத்தமுள்ள 108 இல்லங்களில் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு 80 இல்லங்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு 28 இல்லங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்திலிருந்து 40 கிலோமீற்றர்களுக்கு அப்பால் பதிவிடங்களைக் கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக விண்ணப்பிக்க முடியும்."- என்றார்.

# 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நுவரெலியா, இரத்தினபுரி, பதுளை, மாத்தளை, குருணாகல், கேகாலை, கண்டி, கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களுக்குத் தொடர்ந்தும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

அதேநேரம், அதிகரித்திருந்த அனைத்து ஆறுகளின் நீர் மட்டமும் தற்சமயம் குறைவடைந்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னாயக்க தலைமையில் நேற்று இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், ஞானமுத்து ஸ்ரீநேசன், ஸ்ரீநாத், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா உள்ளிட்டோரும் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.



# சீரற்ற காலநிலையால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 ஆக அதிகரிப்பு

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் விடுத்துள்ளனர் என புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், காணாமல் போன ஒருவர் தொடர்ந்தும் தேடப்பட்டு வருகின்றார் எனவும் 20 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சீரற்ற காலநிலை காரணமாக 138, 191 குடும்பங்களைச் சேர்ந்த 463, 569 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 31, 080 பேர் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 101 வீடுகள் முழுமையாகவும், 2, 567 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.



# கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் வீழ்ச்சி

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த மாதத்தில் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த ஒக்டோபர் மாதத்தில் மறை 0.8 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் நவம்பர் மாதத்தில் மறை 2.1 சதவீதமாக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அதேநேரம், கடந்த ஒக்டோர் மாதம் 1 வீதமாக இருந்த உணவு பணவீக்கம் இந்த மாதம் சிறியளவு வீழ்ச்சியடைந்து 0.6 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

அத்துடன், ஒக்டோபர் மாதத்தில் மறை 1.6 சதவீதமாக இருந்த உணவல்லா பணவீக்கமும் நவம்பரில் மறை 3.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது.



# மாவீரர் நினைவேந்தலுக்கு அனுமதியளித்த ஜனாதிபதிக்கு செல்வம் நன்றி தெரிவிப்பு!

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மக்களின் மனதில் இருக்கும் வலி சுமந்த நாளை அஞ்சலி செய்து நினைவு கூரும் அந்த நாள்களான நடந்து முடிந்த மாவீரர் தினத்தை நினைவு கூர ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்க மற்றும் அரசு அனுமதியை வழங்கியமைக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்களின் மனதில் உள்ள சோகங்களை அவர்களை நினைவு கூர்கின்ற இந்த சந்தர்ப்பத்தையும் எவ்வித இடையூறுகளும் இல்லாமல் முன்னெடுப்பதற்கான அனுமதியை வழங்கிய ஜனாதிபதிக்கு முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் நாங்கள் பார்க்கின்ற போது மாவீரர் நினைவேந்தலின் போது பொலிஸார் மற்றும் இராணுவத்தின் கெடுபிடிகள் தொடர்ந்த வண்ணம் காணப்பட்ட நிலையில், இம்முறை மாவீரர் தின நினைவேந்தலின் போது ஒரு சில இடங்களில் பொலிஸாரினால் அசௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டன.

எனினும் இம்முறை ஒரு நிறைவான நினைவேந்தல் நிகழ்வு வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.அந்த வகையில் ஜனாதிபதிக்கும், தற்போதைய அரசிற்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்ன. – என அவர் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மருதங்கேணிப் பாலம் தற்காலிகச் சீரமைப்பு



வடமராட்சி கடல் நீரேரியில் அமைந்துள்ள மருதங்கேணி பிரதேசத்திற்கான ஒரே ஒரு போக்குவரத்து மார்க்கமாகவும் ஏனைய பிரதேசங்களை இணைக்கும் வகையில் இருக்கின்றதுமான தாழையடி புதுக்காடு பாதையில் அமைந்துள்ள மருதங்கேணிப் பாலம்

அதிகரித்த வெள்ளம் காரணமாக உடைந்து போகும் நிலை காணப்பட்டது.

இந்தப் பாலத்தினுடைய இரு முனைகளிலும் மண் அரிக்கப்பட்டதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் வழங்கப்பட்ட தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மண் அரிப்பு ஏற்பட்ட இரு பகுதிகளிலும் மணல் மூடைகளை அடுக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது செம்பியன்பற்று இராணுவ முகாம் கட்டளை அதிகாரியுடன் தொடர்புகொண்டு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அந்த முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவ்வாறு மணல் மூடைகள் அடுக்கப்பட்டு, சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மருதங்கேணி பாலத்தின் ஊடான போக்குவரத்துச் சீர்செய்யப்பட்டதாக வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பொறியியலாளர் நித்தியானந்தன் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் கனரக வாகனங்கள் இதன் வழியாகப் பயணிப்பதனை இயன்றவரை குறைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும் வழங்கப்பட்டிருப்பதாக மருதங்கேணி பிரதேச செயலாளர் தெரிவித்தார்.


அத்துடன் கொடுக்கிளாய் – இயக்கச்சி பாதையில் இருக்கும் அபாய வெளியேற்றப் பாதை, அதிகரித்த வெள்ளம் காரணமாக முழுமையாக சேதமடைந்திருப்பதனால் அவ்வீதியூடான போக்குவரத்து செய்ய முடியாத நில ஏற்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# திருமலை, மட்டு. அபிவிருத்திக் குழுக்களின் தலைவராக அருண் ஹேமச்சந்திரா நியமனம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவராக, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை பிரதி அமைச்சரும், திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினருமான அருண் ஹேமச்சந்திரா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.




# புயலாக வலுவடைந்த ஆழ்ந்த தாழமுக்கம்

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த தாழமுக்கம் புயலாக வலுவடைந்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது காங்கேசன்துறைக்கு வடகிழக்கே 280 கிலோ மீற்றர் தொலைவிலும் திருகோணமலைக்கு வடகிழக்கே 310 கிலோ மீற்றர் தொலைவிலும் நேற்று மாலை நிலைகொண்டிருந்தது.

மேற்கு அல்லது வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்றைய தினம் இது சூறாவளி புயலாக வட தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கு இடையே கடற்கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மழையுடனான காலநிலை படிப்படியாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

வட மாகாணத்தில் சில பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும்.

அதேநேரம், மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யும்.

மாலை அல்லது இரவில் நாட்டின் ஏனைய பகுதிகளில் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

வடக்கு, வடமத்திய, வடமேல், கிழக்கு, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் இடைக்கிடையே மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# வெள்ளை வான் பற்றிய சர்ச்சைக்குரிய ஊடக சந்திப்பு வழக்கு ராஜிதவையும் ரூமியையும் விடுவித்து நீதிமன்று நேற்றுத் தீர்ப்பு

2019 ஜனாதிபதித் தேர்தலை அண்மித்த காலப்பகுதியில் வெள்ளை வான் கடத்தல் விவகாரம் குறித்து சர்ச்சைக்குரிய ஊடக சந்திப்பை நடத்தி, தகவல்களை வெளியிட்ட சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் பிரதிவாதிகளான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ரூமி மொஹமட் ஆகியோரை அவ்வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை செய்வதாக கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

அரச தரப்பு சாட்சி விசாரணைகள் நிறைவடைந்த நிலையில், குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை எனக் கூறி, பிரதிவாதி தரப்பு சாட்சியங்களை விசாரிக்கமாலேயே நீதிபதி சுஜீவ நிசங்க இந்தத் தீர்ப்பினை அறிவித்தார்.

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி திம்பிரிகஸ்யாய பகுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், அன்டனி டக்ளஸ் பெர்னாண்டோ எனும் பெயரில் பிரசன்னமாகியிருந்த எஸ்.ஏ.சரத்குமார மற்றும் அதுல சஞ்ஜீவ ஆகியோர் பொய்யான விடயங்களை கூறியமை உள்ளிட்ட 14 குற்றச்சாட்டுகளின் கீழ் சட்ட மா அதிபரால் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட் டிருந்தது.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற விசாரணைகளின் போது சந்தேக நபர்களாக, குறித்த ஊடக சந்திப்பில் கருத்துக்களை வெளியிட்ட எஸ்.ஏ.சரத்குமார மற்றும் அதுல சஞ்ஜீவ ஆகியோர், அரச சாட்சியாக மாற்றப்பட்டு மேல் நீதிமன்ற வழக்கில் பிரதான சாட்சியாளர்களாக பெயரிடப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

2019 ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கும் 2019 நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இக்குற்றத்தை புரிந்ததாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கை நிரூபிக்க அரச தரப்பால் 21 சாட்சியாளர்கள் பட்டியலிடப்பட்டமையுடன், 5 சான்றுப் பொருள்க தொடர்பிலும் மன்றுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

பிரதிவாதிகளுக்காக கௌரி சங்கரி சட்ட நிறுவனத்தின் அனுசரணையில், சட்டத்தரணிகளான தர்மஜா தர்மராஜா, ஓஷதி ஹப்பு ஆரச்சி ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி அணில் சில்வா ஆஜரானார். சட்ட மா அதிபர் சார்பில் அரச சட்டவாதி பத்மால் ஆஜரானார்.

வழக்குத் தொடுநரான சட்ட மா அதிபர் தரப்பானது கடந்த தவணையில் தமது தரப்பு சாட்சிய நெறிப்படுத்தலை முடித்துக்கொன்டிருந்தது. இந்த் நிலையிலேயே நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தது.

இதன்போது ராஜித்த சேனாரத்ன உள்ளிட்ட இரு பிரதிவாதிகளும் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

பிரதிவாதி தரப்பு தமது சார்பில் சாட்சியாளர்களை அழைக்காது, முறைப்பாட்டாளர் தரப்பு முன் வைத்த சாட்சியங்கள் ஊடாக குற்றப் பத்திரிகையில் முன் வைக்கப்பட்ட 14 குற்றச்சாட்டுக்களில் எதனையும் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என வாதிட்டது. அதனால் குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவையின் 200 ஆவது அத்தியாயத்துக்கு அமைய பிரதிவாதி தரப்பு சாட்சியங்களை கோராது பிரதிவாதிகளை விடுதலை செய்யுமாறு அத்தரப்பில் கோரப்பட்டது.

இந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி சுஜீவ நிசங்க, வழக்குத் தொடுநர் தரப்பு வழக்கை நிரூபிக்கவில்லை என கூறி ராஜித்த சேனாரத்ன மற்றும் மொஹமட் ரூமி ஆகியோரை அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவித்து விடுதலை செய்வதாக அறிவித்தார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்டதன் பின்னர், பிரதிவாதிகள் இருவரும் தலா 10,000 ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை மற்றும் 05 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் செல்வதற்கு மேல் நீதிமன்றம் அனுமதித்து அவர்களது வெலிநாட்டுப் பயணங்களைத் தடை செய்து 2020 ஆகஸ்ட் 28 இல் உத்தரவிட்டிருந்தது. தற்போது இருவரும் முற்றாக வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதனூடாக அவர்களது வெளிநாட்டு பயணத் தடை உள்ளிட்ட அனைத்து நிபந்தனைகளும் நீங்கியுள்ளன.




# அரிசி இறக்குமதிக்கான விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதற்கு விலைமனு கோரப்பட்டது

அரிசி இறக்குமதிக்கான விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதற்காக நேற்று முதல் விலைமனு கோரப்படவுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

அரிசியை இறக்குமதி செய்வது தொடர்பில் நேற்று முதல் 7 நாள்களுக்குள் இறக்குமதியாளர்கள் விண்ணப்பிக்க முடியும் என லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர் கலாநிதி சமித்த பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு கட்டங்களின் கீழ் 70,000 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் பண்டிகைக்காலத்திற்கு முன்னர் அரிசியை சந்தைகளுக்கு விநியோகிக்கும் எதிர்பார்ப்புடன் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இறக்குமதி செய்யப்படும் அரிசியை லங்கா சதொச விற்பனை நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் மொத்த வியாபாரிகள் ஊடாகவும் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக லங்கா சதொச தலைவர் கலாநிதி சமித்த பெரேரா தெரிவித்துள்ளார்.






# கைதடியில் பூசகரை மோசமாக தாக்கி பணம் நகை பறித்த கும்பல் சிக்கியது!

## திருட்டுப் பொருட்களும் மீட்கப்பட்டன

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கைதடிப் பகுதியில் அமைந் துள்ள ஆலயத்தில் வைத்து கடந்த புதன்கிழமை பூசகரைத் தாக்கி பணம், நகை அபகரித்த குழுவை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.

இதன்போது பூசகரிடம் இருந்து பறிக்கப்பட்ட ஒன்றரைப் பவுண் சங்கிலி, பூசகரிடம் பறிக்கப்பட்ட நாற்பதாயிரம் ரூபாய் பணம் மற்றும் பூசகருடைய சங்கிலியை விற்றுப் பெற்ற இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா பணம் ஆகியவற்றை பொலிஸார் மீட்டனர். பெண் ஒருவர் உட்பட மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு திருட்டுச் சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சந்தேக நபர்களை நீதி மன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக் கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரே மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை கடும் மழையுட னான காலநிலை நிலவிய நிலையில் மேற்படி கொள்ளைக் குழு ஆலயத்தில் கடமையில் இருந்த பூசகரை கத்தி மற் றும் பொல்லுகளால் தாக்கி படுகாயப் படுத்தி நகை மற்றும் பணத்தை அபக ரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பலத்த மழையால் 130 குளங்கள் சேதம்

பலத்த மழை காரணமாக விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு உரித்தான 130 இற்கும் மேற்பட்ட குளங்கள் சேதமடைந்துள்ளன.

வவுனியா மாவட்டத்திலேயே அதிகளவான அணைக்கட்டுகள் சேதமடைந்துள்ளன என விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் ரோஹன ராஜபக்ஸ குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் 42 அணைக் கட்டுகள் சேதமடைந்துள்ளதுடன் சேதமடைந்துள்ள குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்களை புனர மைக்கும் நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப் பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என விவசாய அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித் துள்ளார்.



# குற்றவாளிகளின் சொர்க்க பூமியாக மாறிய தமிழகம்: பழனிசாமி விசனம்

தமிழகத்தை குற்றவாளிகளின் சொர்க்கபூமியாக முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க, அரசு மாற்றியுள்ளது என அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி குற்றம் சுமத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

"திருப்பூர் மாவட்டம் சேமலைக் கவுண்டம்பாளையத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியளிக்கின்றது.



தி.மு.க, ஆட்சியில் குற்றவாளிகளுக்கு துளியும் பயமில்லை.

இந்த ஆட்சியில் நடக்கும் தொடர் குற்றங்களால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

தமிழகத்தை குற்றவாளிகளின் சொர்க்க பூமியாக முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க, அரசு மாற்றி உள்ளது. இதற்கு தான் கடுமையாகக் கண்டனம் தெரிவிக்கின்றோம்.

இக்கொலையுடன் தொடர்புள்ள அனைவரையும் கைது செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், சட்டம் ஒழுங்கைக் காக்க இனியாவது செயல்படுமாறும் முதலமைச்சரை நான் வலியுறுத்துகிறேன்."- என்று குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய விமான நிறுவனங்களுக்கு 1,000 வெடிகுண்டு மிரட்டல்கள்

இந்தியாவின் விமான நிறுவனங்கள், விமான நிலையங்களுக்கு இந்த ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் மொத்தம் 999 போலி வெடிகுண்டு மிரட்டல்கள் வந்துள்ளன என அந்த நாட்டின் துணை சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது 2023 இல் பெறப்பட்ட அச்சுறுத்தல்களை விட கிட்டத்தட்ட 10 மடங்கு அதிகம் என்று அமைச்சர் முரளிதர் மொஹோல் கூறியுள்ளார்.

இந்த வெடி குண்டு மிரட்டல்களில் 500 இற்கும் மேற்பட்ட அச்சுறுத்தல்கள்



ஒக்டோபர் இறுதி இரண்டு வாரங்களில் பெறப்பட்டன.

போலி அச்சுறுத்தல்களின் வியத்தகு அதிகரிப்பு, விமான அட்டவணையில் அழிவை ஏற்படுத்தியது, இதனால் சேவைகளில் பரவலான இடையூறு ஏற்பட்டது.

இந்த அச்சுறுத்தல்கள் தொடர்பில் பொலிஸார் 256 முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளதாகவும், 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2014 - 2017 இற்கு இடையில் இந்திய அதிகாரிகள் விமான நிலையங்களில் வெறும் 120 போலி வெடிகுண்டு எச்சரிக்கைகளை மாத்திரம் பதிவு செய்திருந்தனர்.

இவற்றில் 50 சதவீதமானவை நாட்டின் மிகப்பெரிய விமான நிலையங்களான டில்லி மற்றும் மும்பைக்கு விடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அதானி, சம்பல், மணிப்பூர் விவகாரங்கள்: 4 ஆவது நாளாக நாடாளுமன்றம் முடக்கம்



அதானி, சம்பல், மணிப்பூர் விவகாரங்களில் எதிர்க்கட்சிகளின் தொடர் அமளியால் 4 ஆவது நாளாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் முடங்கின.

கடந்த 25 ஆம் திகதி நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் தொடங்கியது. அமெரிக்க நீதிமன்றம் அதானிக்கு பிடிவாரன்ட் பிறப்பித்த விவகாரம், சம்பல் கலவரம், மணிப்பூர் வன்முறை குறித்து விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி முதல் நாளில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். அன்றைய தினம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் முடங்கின.

நவம்பர் 26 ஆம் திகதி பழைய நாடாளுமன்ற கட்டடத்தில் அரசமைப்பு சட்ட தினம் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் நாடாளுமன்ற கூட்டம் நடைபெறவில்லை. கடந்த 27, 28 ஆம் திகதிகளில் அதானி விவகாரத்தை எழுப்பி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் கோஷம் எழுப்பினர். இதனால் இரண்டு நாள்களும் நாடாளுமன்றம் முடங்கியது.

இதைத் தொடர்ந்து நாடாளுமன்றம் நேற்று காலை கூடியது. மக்களவையில் வழக்கம்போல அதானி, சம்பல், மணிப்பூர் விவகாரங்களை எழுப்பி எதிர்க்கட்சி எம்.பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். இதன் காரணமாக மக்களவை பிற்பகல் 12 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதன்பிறகு அவை கூடியபோது மீண்டும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டனர். இதனால் மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையில் இதே கோரிக்கைகளை வலியுறுத்தி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள் கோஷமிட்டனர். இதுகுறித்து அவைத் தலைவர் ஜெகதீப் தன்கர் கூறும்போது, "மக்கள் நலன் சார்ந்து எம்பிக்கள் செயல்பட வேண்டும். ஆனால் எதிர்க்கட்சி எம்பிக்கள் தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தி வருகின்றனர்" என்று குற்றம் சாட்டினார்.





# அமெரிக்க பொருளாதாரத் தடைகளை ஆதரிப்பவர்களுக்கு சிறை தண்டனை

வெனிசுலாவில் அமெரிக்க பொருளாதாரத் தடைகளை ஆதரிப்பவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனைகளை அமுல்படுத்தும் நடவடிக்கைக்கு, அந்த நாட்டு சட்டமியற்றுபவர்கள் அனுமதி அளித்துள்ளனர்.

இதன்படி, வெனிசுலாவின் தேசிய சட்டமன்றம் சைமன் பொலிவர் லிபரேட்டர் சட்டத்தினை நேற்று முன்தினம் நிறைவேற்றியதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த சட்டத்தின்படி, வெனிசுலாவுக்கு எதிரான அமெரிக்கப் பொருளாதாரத் தடைகளை ஆதரிக்கும் அதிகாரிகள் 60 ஆண்டுகள் வரை பதவியில் இருப்பதற்குத் தடை விதிக்கப்படுகிறது.

வெனிசுலாவில் அமெரிக்கப் பொருளாதாரத் தடைகளை ஊக்குவித்தல், தூண்டுதல், உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு 25 முதல் 30 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படுமெனக் குறிப்பிடப்படுகிறது.

அத்துடன், வெனிசுலாவில் அமெரிக்க பொருளாதாரத் தடைகளை ஆதரிக்கும் ஒளிபரப்பு ஊடகங்களை முடக்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




# உகாண்டாவில் பெய்த பலத்த மழையால் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 30 பேர் பலி!

உகாண்டாவில் பெய்த பலத்த மழையினால் ஏற்பட்டுள்ள மண்சரிவில் சிக்கி 30 பேர் உயிரிழந்துள்ளனர். 100 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர்.

அத்துடன், 40 வீடுகள் மண்ணில் புதைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடான உகாண்டாவின் கிழக்குப் பகுதியில் உள்ள புலாம்புலி பகுதியே இவ்வாறு மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து பேரிடர் மீட்புப்படையினர் சம்பவ இடத்திற்குச் சென்று உயிரிழந்த சடலங்களை மீட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.







# இன்றைய ராசி பலன்கள் - 30.11.2024




இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.




இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும். வாழ்வின் நன்மை தீமை உணர்வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகள் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக்கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.நீங்கள் ஆரோக்கியமாக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள்.இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சீரான பணப்புழக்கம் காணப்படும். உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலையை தவிர்க்கலாம்.ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமரிக்க இத்தகைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல்களில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தினால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். இன்று செலவுகள் அதிகரித்து காணப்படும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தியை உணர்வீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நல்லாதரவு பெரும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணயுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் பரஸ்பரம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அன்பு வளரும்.

அதிக பண வரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். அமைதியான சூழ்நிலை காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் உங்கள் உணர்வுகளையும் உணர்சிகளையும் கட்டுப்படுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.11.2024

## தனுசு

இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக்கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிக ரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை உயர்த்துவதற்கு நீங்கள் இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

## கும்பம்

இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும்.அனுசரனையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப் பணிகள் சுமையாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.

சிறப்பான ஆரோக்கியத்திற்கு முறையான உணவு முறையை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். ஆன்மீக ஈடுபாடு காரணமாக மன அமைதி கிடைக்கும்.

## மகரம்

இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களின் உறுதியான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்த இயலும்.

இன்று சௌகரியங்கள் அதிகம் காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மீனம்

சில குடும்ப பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள்.எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள் வதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப் படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்துகொள்ள இயலாது.

